# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT

LIBRARY
04 MAY 2008
Eastern University, Sri Lanka

## PART III EXAMINATION IN BACHELOR OF COMMERCE 2000/2001
## External Degree (Proper/ Repeat June 2007)

## COM 403 சர்வதேச வர்த்தகமும் நிதியும்

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக நேரம்: 3 மணித்தியாலம்

1 i. உள்நாட்டு வர்த்தகம் சர்வதேச வர்த்தகம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக

(5 புள்ளிகள்)

ii. சர்வதேச வர்த்தகத்தினால் அதில் ஈடுபடும் நாட்டிற்குக் கிடைக்கும் பிரதான நன்மைகள் எவை?

(5 புள்ளிகள்)

iii முழுநன்மைக் கோட்பாட்டில் சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையானவை எவை?

(5 புள்ளிகள்)

iv சர்வதேச வர்த்தகம் பற்றிய முழுநன்மைக் கோட்பாட்டின் பிரதான எடுகோள்கள் எவை?

(5 புள்ளிகள்)

2 i. சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டினை விளக்குக

(8 புள்ளிகள்)

ii. "சமகால சர்வதேச வர்த்தக அமைப்பினை விளக்கும் கோட்பாடுகளில் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு மிக முக்கியமானதாகும்" இக் கருத்தினை விமர்சிக்குக

(12 புள்ளிகள்)

3 . அமெரிக்கா, கனடா ஆகிய இரு நாடுகள் ஓரினமான ஊழியக் காரணிகளைப் பயன்படுத்தி ஆடைகள், கோதுமை ஆகிய வேறுபட்ட இரு பொருட்களை உற்பத்தி செய்கின்றன. பின்வரும் அட்டவணை இரு பொருட்களினதும் உற்பத்திகளைக் காட்டுகின்றது.)

| | அமெரிக்கா | | கனடா | |
|---|---|---|---|---|
| | ஆடை | கோதுமை | ஆடை | கோதுமை |
| A | 0 | 10 | 0 | 20 |
| B | 4 | 8 | 2 | 16 |
| C | 8 | 6 | 4 | 12 |
| D | 12 | 4 | 6 | 8 |
| E | 16 | 2 | 8 | 4 |
| F | 20 | 0 | 10 | 2 |

வர்த்தகத்திற்கு முன்னர் இரு நாடுகளும் அரைவாசி ஊழியக் காரணிகளை ஆடை உற்பத்தியிலும், மிகுதி அரைவாசி ஊழியக் காரணிகளை கோதுமை உற்பத்தியிலும் பயன்படுத்துகின்றன. இரு நாடுகளும் சம அளவான காரணி வளத்தினைக் கொண்டுள்ளன

i. ஒவ்வொரு நாட்டிற்கும் உற்பத்திச் சாத்திய வளையியினை வரைக.

ii இரு நாடுகளிலும் ஆடை, கோதுமை என்பவற்றின் சந்தர்ப்பச் செலவுகள் என்ன?

iii இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தின் மூலம் பெறும் நன்மைகளைக் காட்டுக

(20 புள்ளிகள்)

4 i. H.O மாதிரியில் ஒப்பீட்டு நன்மை, வர்த்தகம் என்பவற்றை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?

(5 புள்ளிகள்)

ii. காரணிச் செறிவு, காரணிக் கொடை என்பவற்றினால் கருதப்படுவது என்ன?

(5 புள்ளிகள்)

iii H.O மாதிரியின் பிரதான முடிவுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

5 i. தீர்வை, இறக்குமதி அனுமதிப் பங்கு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக

(6 புள்ளிகள்)

ii. பெயரளவுத் தீர்வை, பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் எவை?

(6 புள்ளிகள்)

iii இறக்குமதி செய்யும் நாட்டிற்கு இறக்குமதி அனுமதிப் பங்கின் தாக்கங்கள் எவை?

(8 புள்ளிகள்)

6 i. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வகைகளை விளக்குக

(6 புள்ளிகள்)

ii. வர்த்தக ஆக்கம், வர்த்தகத் திருப்பம் என்பவற்றை வேறுபடுத்துக.

(6 புள்ளிகள்)

iii வர்த்தக ஆக்கத்தினை ஏற்படுத்தும் சுங்கக் கூட்டின் பிரதான விளைவுகள் எவை

(8 புள்ளிகள்)

7 i. குவித்தல் என்பதனால் கருதப்படுவது என்ன?

(5 புள்ளிகள்)

ii. குவித்தலின் பல்வேறு வகைகளை விளக்குக

(5 புள்ளிகள்)

iii இறக்குமதி செய்யும் நாட்டிற்கும், ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கும் குவித்தலின் விளைவுகளை விளக்குக.

(10புள்ளிகள்)

8. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்புக்கள் எழுதுக

a. நாணய மாற்றுச் சந்தையின் தொழிற்பாடுகள்

b. இலங்கையின் வர்த்தக் கொள்கை

c. வர்த்தக மாற்று வீதம்

d. வழங்கல் வளையி

LIBRARY
04 MAR 2008
Eastern University, Sri Lanka